2nd November 1962]

*1079 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பெரம்பலூர் வட்டம், ஓகளூர் அல்லது அத்தியூர் இவைகளில் ஏதாவது ஒன்றில் விவசாயப் பண்ணை ஒன்று நிறுவ உத்தேசமுண்டா ?

கனம் திரு பூ. கக்கன் : இல்லை.

திரு. இரா. நாராயணன்: தலைவர் அவர்களே, ஓகளூர், அத்தியூர் ஆகிய இடங்களில் விவசாயப் பண்ணை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சுற்று வட்டாரத்தில் நீர் வளமும், நில வளமும் இருப்பதால், அங்கு பொது மக்கள் ஒரு விவசாயப் பண்ணை வேண்டும் என்று விரும்புவதால், அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ? 9–30 a. m.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே இது பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது உடையார்பாளையம் தாலூகாவில் காமரசவல்லியில் ஒரு ஸீட் பாரம் வைப்பதாக ப்ரப்போஸல் இருக்கிறது. ஓகளூர் அல்லது அத்தியூரில் வைப்பதாக இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இருந்தாலும், இதைப்பற்றி மறுபடியும் 'எக்ஸாமின்' பண்ணச் சொல்லுகிறேன். 'ஸீட் பாரம்' வைப்பதென்றால் நினைத்த இடத்தில் வைக்க முடியாது. அதற்கு பூமியின் தரம் நன்றாக இருக்கவேண்டும். நஷ்டம் வந்து விடக்கூடாது. எல்லாவற்றையும் பார்த்துதான் பரிசீலனை செய்ய வேண்டும்.

மணிலா உற்பத்தி.

*1080 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செஞ்சி தாலூகாவில் மணிலா உற்பத்தி அதிகமாக இருப்பதால் அங்கு மணிலா கேக் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை, ஐயா.

தொழிற்பயிற்சி (கடன் உதவி)

*1081 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் } கனம்
திரு. இரா. நாராயணன் }
கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தொழிற்கல்வி பயிலும் என்.ஜி.ஓ-க்கள், ஆசிரியர்கள் போன்றோர் பிள்ளைகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டத்தின் விவரமென்ன ?